**OS.NO:40/2022**

**PW1 : திரு.சேகர்.**

நாள் : 03.12.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –**

ஒரு மனைக்கு என்ன என்ன காரணங்களால் அங்கீகாரம் அளிக்கமாட்டார்கள் என்றால், எனக்கு அது தெரியாது. நானும், 2ம் வாதியும் தாவா சொத்துக்கள் இரண்டையும் வாங்கினோம். அதில் ஒரு சொத்திற்கு பகுதியாக அங்கீகாரம் வழங்கப்பட்டது. நாங்கள் சொத்துக்களை வாங்கியதற்கு ஆதாரமாக பவர் பத்திரம் மற்றும் கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். 2ம் வாதி பெயரில் வா.சா.ஆ.4 ஆவணம் இல்லை என்றால், சரியல்ல. அதில் நானும், 2ம் வாதியும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம். வா.சா.ஆ.4ல் வாதிகளின் பெயர் வாங்குவோர்கள் பெயர்களாகவோ அல்லது சொத்தை விற்றவர்கள் பெயர்களாகவோ இல்லை என்றால், சரிதான். விஸ்வநாதன், சுப்பிரமணியன் இருவரும் சொத்துக்களை வாங்கியதாக வா.சா.ஆ.4ல் உள்ளது. வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துதான், தாவா பி அட்டவணை சொத்துக்கள் என்றால், சரிதான். விஸ்வநாதன், சுப்பிரமணியன் இருவரும் வழக்கில் தரப்பினர்கள் அல்ல என்றால், சரிதான். வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துக்கு எங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. தாவா பி அட்டவணை சொத்துக்கள் சம்மந்தமாக தவாவில் கோரியபடி எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4ல் எங்கள் பெயர் இல்லாததால், தாவா பி அட்டவணை சொத்துக்களை பொறுத்து நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், அது சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் மறுபயனுக்காக எனக்கு

கொடுக்கப்பட்டதா அல்லது மறுபயன் இல்லாமல் கொடுக்கப்பட்டதா என்றால், பணம் கொடுத்து, கிரையம் வாங்கியதற்காக கொடுக்கப்பட்ட பொது அதிகாரம் பத்திரம் தான் வா.சா.ஆ.3 ஆகும். வா.சா.ஆ.3 பணம் கொடுக்காமல் பெறப்பட்ட பொது அதிகார பத்திரம் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ல் 4 வது பக்கத்தில் 3 வது பத்தியில் "நாங்கள் தங்களிடமிருந்து எந்தவித கைமாறும் பெறவில்லை" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ரியல் எஸ்டேட் தொழிலில் பணம் கொடுத்து கிரையம் வாங்கினாலும், வா.சா.ஆ.3 போன்று ஆவணம் எழுதுவது வழக்கம். வா.சா.ஆ.3 ல் கைமாறு பெறவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் நான் கைமாறு கொடுத்து தான் அதிகாரம் பெற்றேன் என்பதற்கு சான்றாக, நான் ஏமாற்றப்பட்டேன் என்பதற்காகவோ பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அளித்தேனா என்றால், நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை, அதற்கான அவசியமும் ஏற்படவில்லை. நான் பணம் கொடுத்து ஏமாந்தேன் என்று பிரதிவாதிகளின் மீது காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால், நான் புகார் கொடுக்கவில்லை, நான் பணம் கொடுத்து ஏமாந்ததாக எங்கும் சொல்லவில்லை. வா.சா.ஆ.3 ல் சொத்து எங்கள் பெயருக்கு கிரையம் செய்யப்பட்டதாக எந்த வாசகமும் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்தை பராமரித்து, மேம்படுத்தி விற்பனை செய்வதற்காக மட்டும் தான் எங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்றால், அது தவறு. நாங்கள் சொத்தை கிரையம் வாங்கியதற்குதான் வா.சா.ஆ.3 அதிகாரம் அளிக்கப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணம் சொத்தை நாங்கள் கிரையம் வாங்கியதற்காக கொடுக்கப்பட்டது. அவ்வாறு நாங்கள் சொத்தை கிரையம் வாங்கியதற்காக கொடுக்கப்பட்டதாக வா.சா.ஆ.3 ல்

வாசகம் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.3 என்னுடைய பெயருக்கு 2007 ஆண்டு டிசம்பர் மாதம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.3 ஆனது தாவாவில் கண்ட ஏ அட்டவணை சொத்திற்காக மட்டும்தான் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான்.

**(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி, ஒத்திவைக்கப்படுகிறது).**

S/d. M.Selvam,
I Additional District Judge,
Ranipet.